அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

ஹேவிளம்பி ஆண்டு பங்குனி - சித்திரை மே 2017 முரசு 10 ஒலி 119



திருநிலைத்துநல் அருளொடும் அன்பொடும் சிறப்பொடும் செழித்து ஓங்க
உருநிலைத்து இவண் மகிழ்வொடு வாழ்வுற உவந்துநின் அருள்செய்வாய்
இருநிலத்தவர் இன்புறத் திருவருள் இயல்வடிவொடு மன்றில்
குருநிலைத்த சற்குரு எனும் இறைவ நின் குரைகழல் பதம் போற்றி

ஆழ்நிலை தியான முகாம் & அருள் பூரண சித்தி யோகம் பயிற்ச்சி முகாம்களின் அழைப்பிதழ்கள் உள்ளே...

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

## அன்பு அருள் ஆனந்தம் உணர்த்தும்

# ஆழ்நிலை தியான முகாம்



## இயற்கைச் சூழலில் மூன்று நாட்கள்...

சுருள்விரிவுடை மனச்சுழல் எலாம் அறுத்தே
அருள்ஒளி நிரப்பிய அருட்பெருஞ்ஜோதி – அருட்பெருஞ்ஜோதி

**நாள்: ஜூன் 24, 25 & 26** சனி, ஞாயிறு & திங்கள்
மூன்று நாட்கள் முழுவதும்

**இடம்: வள்ளலார் சத்திய யோக சாலை,**
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,
**பொள்ளாச்சி.**

### இந்த பயிற்சி முகாமில்...

- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- ஆழ்நிலை தியானங்கள்
- திருவருட்பா பாராயணம்
- மூலிகைக் குறிப்புகள்

போன்றவை கற்றுத் தரப்படும்.

உங்களுக்கு நீங்களே இந்த மூன்று நாட்கள் வாய்ப்பளியுங்கள்.
முதலில் பதிவுசெய்யும் 80 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

முன்பதிவு மற்றும் விபரங்களுக்கு:

**94434 89849, 97509 29074, 9865229035**

அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளை, திருவண்ணாமலை.

அன்பு உள்ளங்களே! நாம் இப்பூவுலகில் ஆனந்தமாக வாழ்வதற்கே பிறந்திருக்கின்றோம். அதற்கு நம் உடல், மனம், உயிர் இம்மூன்றும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இந்த மூன்றும் ஆரோக்கியமாக இருப்பதற்கு பஞ்ச பூதங்களினின்று நமக்குக் கிடைக்கும் சக்திகள் நம் உடலில் சரியான விகிதத்தில் நிறைந்திருக்க வேண்டும்.

இவைகளில் எது ஒன்று குறைந்தாலும் அதற்கு ஏற்பவே உடல் அல்லது மனதில் துன்பங்கள் வரும். இவைகளை சரிசெய்து கொள்வதற்கு பஞ்ச பூதங்களிலிருந்து சக்தியைப் பெறும் முறையை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இருந்த இடத்திலிருந்தே இச்சக்திகளைப் பெற்றுக்கொள்ளும் இயற்கை இரகசியங்களை நம் வள்ளல் பெருமானார் கண்டு கொண்டார்கள். அதன்மூலம் எல்லாச் சக்திகளையும் பெற்றார்கள். அதற்கு சில ஒழுக்க நெறிமுறைகளை மேற்கொண்டார்கள். வெற்றியும் பெற்றார்கள். உலகம் தழைக்க வந்துதித்த நம் வள்ளல் பெருமான் கண்ட இவ்வொழுக்க நெறிமுறைகளை எல்லா மக்களுக்கும் அறிவிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டதே. **“ஆழ்நிலை தியான முகாம்”**

## பயிற்சியில் கலந்துகொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. பயிற்சியில் கலந்துகொள்வோர் ஜூன் 23-ஆம் தேதி வெள்ளி இரவிற்குள் வந்துவிட வேண்டும்.
2. 17 வயதிற்கு மேல் உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
3. டார்ச் லைட் கண்டிப்பாக எடுத்து வரவும்.
4. அன்பர்கள் 3 நாட்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களோடு படுப்பதற்கும், யோகா செய்வதற்கும் 2 பெட்ஷீட், அணிவதற்கு ஆண்கள்: T.ஷர்ட், ஷாட்ஸ் மற்றும் பெண்கள்: சுடிதார் போன்ற வசதியான ஆடைகளை எடுத்துவரவும். குறிப்பு எடுக்க நோட்டு பேனா எடுத்து வரவும்.
5. பயிற்சியில் மூன்று நாட்கள் முழுவதும் கலந்துகொள்ள வேண்டும். ஜூன் 26-ஆம் தேதி திங்கள் மாலை 5 மணிக்கு முகாம் முடிந்துவிடும்.

**பஸ் ரூட்:** பொள்ளாச்சி, உடுமலை பேட்டை ஆகிய ஊர்களிலிருந்து பஸ் வசதி உள்ளது. பழனி வழியாக வருவோர் பழனி - ஆனைமலை பேருந்தில் ஏறி ரெட்டியார் மடம் ஸ்டாப்பிங்கில் இறங்கி அர்த்தநாரிப்பாளையம், பெருமாள்மலை அடிவாரம் என கேட்டு வரவும்.

பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: **16, 27, 58** (கடைசி பஸ் இரவு 9:30க்கு)

உடுமலையிலிருந்து பஸ் எண்: **28, 34** (கடைசி பஸ் இரவு 8:30க்கு)

# உண்மை விளக்கம்

நியூயார்க் நகரிலிருந்து ஒருவர் மும்பை அலுவலகக் கட்டிடத்திற்கு வந்திருந்தார். கட்டிட வளாகத்தின் வெளியே அனேக பிச்சைக்காரர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களைக் கண்டு மனம் இரங்கி உதவும் எண்ணத்தோடு அங்கிருந்த பிச்சைக்காரர்களில் ஒருவனுக்கு பணம் கொடுத்தார். அப்போது அந்த பிச்சைக்காரன் ஒரு கையை கொடுத்தவரிடம் நீட்டி மற்றொரு கையை பக்கவாட்டில் நீட்டினான்.

இதைக் கண்ட வெளிநாட்டவர் "இவ்வாறு ஏன் செய்கிறாய்?" என்று வினவ அவன் சிறிதும் தயக்கமின்றி "என்னுடைய இந்த தொழில் நன்றாக நடக்கிறது. எனவே இதற்கான கிளைப் பிரிவை ஆரம்பித்திருக்கிறேன்" என்றான். இதைக் கேட்டதும் வெறுத்துப் போனார் அந்த வெளிநாட்டவர்.

வேறு யாருக்காவது உதவலாம் என்று எண்ணி அலுவலக வாயிலருகே அமர்ந்திருந்தவனிடம் நெருங்கினார். அந்த வெளிநாட்டவர்க்கு அவனை எங்கோ பார்த்ததுபோன்ற உணர்வு. அவனிடம் சென்று "நீ இதற்கு முன் நியூயார்க் வந்திருக்கிறாயா?" என வினவினார்.

அதற்கு அவனோ "நான் நியூயார்க்கெல்லாம் வந்ததில்லை. அனேகமாக நீங்கள் என் பேஸ்புக் ஃப்ரண்டாக இருக்கலாம்" என்றான். இதைக் கேட்டு அதிர்ந்து போனார்.

இன்றைய சூழ்நிலையில் எல்லோரும் தொழில் நுட்ப ரீதியில் வளர்ச்சி அடைந்திருக்கிறோம். கூலி வேலை செய்பவனிடம் செல்போன். அதில் whatsapp. ஆனால் இந்த வளர்ச்சி நம் அறியாமையை போக்கி இருக்கிறதா? குணத்தளவில் மாற்றம் செய்திருக்கிறதா? ஆன்ம வளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறதா? வாழ்க்கை என்றால் என்ன என்று கற்றுத்தந்திருக்கிறதா? இந்த கேள்விக்கு பதில் 'இல்லை' என்பது மட்டுமே.

நாம் பரிணாம வளர்ச்சி அடைந்துவிட்டதாக நினைத்து நம்மை நாமே ஏமாற்றி கொண்டிருக்கிறோம் அல்லது ஏமாந்து கொண்டிருக்கிறோம்.

நம் வள்ளுவ பெருந்தகையும்

**ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல**

ஒரு பொழுதளவும் தம்முயிர் நிலைநிற்கும் என்பதனை அறியாராயிருந்தும், வீணில் எண்ணுவனவோ ஒரு கோடியும் அல்ல, மிகப்பல எண்ணங்கள் என்கிறார்.

இக்கருத்தையே நம் வள்ளல் பெருமானாரும்

**'உடம்பு வருவகை அறியீர் உயிர்வகையை அறியீர்**
**உடல்பருக்க உண்டுநிதம் உறங்குதற்கே அறிவீர்**
**மடம்புகுபேய் மனத்தாலே மயங்குகின்றீர் மனத்தை**

**வசப்படுத்தீர் வசப்படுத்தும் வழிதுறை கற்றறியீர்**
**இடம்பெறு பொய் வாழ்க்கையிலே இன்பதுன்பம் அடுத்தே**
**எண்ணிஎண்ணி இளைக்கின்றீர் ஏழைஉலகீரே**
**நடம்புரிஎன் தனித்தந்தை வருகின்ற தருணம்**
**நண்ணியது நண்ணுமினோ புண்ணியஞ்சார் வீரே”**

என்று நாம் வாழும் முறையை கண்டு சாடுகின்றார்.

நமக்கு இந்த மனிதப் பிறவி மிகவும் சாதாரணமான ஒன்றாகக் காட்சியளிக்கிறது இல்லையா? மனிதப் பிறவி மிகவும் மேன்மையுடையது என்று கூறுவதற்கு என்ன இருக்கிறது? ஒரு ஆணும் பெண்ணும் இணைந்தால் கரு உருவாகிறது. இதில் என்ன மேன்மை இருக்கிறது? இதிலென்ன சிறப்பு இருக்கிறது. இதிலென்ன தனித்தன்மை இருக்கிறது? என்று நம்முடைய அறிவு கேள்வி கேட்கும். ஆனால், உண்மையில் ஒரு உயிரானது மனிதப் பிறவி எடுப்பதற்கு முன் என்னென்ன பிறவிகளை கடந்து வந்து இருக்கிறது என்பதையும் அந்தந்த பிறவிகளில் ஒவ்வொரு உயிரும் எப்படியெல்லாம் அவஸ்தைப்பட்டது என்பதையும் நம் வள்ளல் பெருமானார் விவரிக்கின்றார். அதனை தெரிந்து கொண்டால் நாம் இப்போது பெற்றுள்ள மனிதப் பிறவியின் மகத்துவம் புரியும்.

இனி வள்ளல்பெருமான் கூறியுள்ளதை காண்போம்.

அஞ்ஞான இருளில் ஒன்றும் தெரியாது உணர்ச்சியின்றிக் கிடந்த காலம்போக, அவ்விருளை விட்டு நீங்கிய காலத்தே இவ்வுலகிடத்தே...

| பிறந்த பிறவிகள் | பட்ட அவஸ்தைகள் |
|---|---|
| 1. தாவரயோனிவர்க்கம் | |
| புல், நெல், மரம், செடி, பூடு ------ | களையுண்டல், வெட்டுண்டல், அறுப்புண்டல், கிள்ளுண்டல் |
| கல், மலை, குன்று ---------------- | உலர்ப்புண்டல், உடைப்புண்டல், வெடிப்புண்டல் |
| 2. ஊர்வன, நீர் வாழ்வன யோனிவர்க்கம் | |
| எறும்பு, செல், புழு, பாம்பு, உடும்பு, பல்லி ---------------------- | தேய்ப்புண்டல், நசுக்குண்டல், அடியுண்டல் |
| தவளை, சிறுமீன், முதலை, சுறா, திமிங்கலம் ------------------------ | பிடியுண்டல் |
| 3. பறவை யோனிவர்க்கம் | |
| ஈ, வண்டு, தும்பி, குருவி, காக்கை, பருந்து, கழுகு ----------------------- | அடியுண்டல், பிடியுண்டல், அலைப்புண்டல், உலைப்புண்டல் |
| 4. விலங்குயோனிவர்க்கம் | |
| அணில், குரங்கு, நாய், பன்றி, பூனை, | பிடியுண்டல், அடியுண்டல், |

| | |
|---|---|
| ஆடு, மாடு, யானை, குதிரை, புலி, கரடி | குத்துண்டல், வெட்டுண்டல், தாக்குண்டல், கட்டுண்டல், தட்டுண்டல் |
| **5. தேவயோனிவர்க்கம்** | |
| பைசாசர், பூதர், இராக்கதர், அசுரர், சுரர் | அலைப்படுதல், அகப்படுதல், அகங்கரித்தல், அதிகரித்தல், மறந்து நிற்றல், நினைந்து நிற்றல், மயக்குறுதல், திகைப்புறுதல், போரிடுதல், கொலைபடுதல் |
| **6. நரகயோனிவர்க்கம்** | |
| காட்டகத்தார், கரவுசெய்வார், கொலைசெய்வார் | பயப்படல், சிறைப்படல், சிதைபடல் |

"அங்ஙனம், நாங்கள் அப்பிறவிகள் தோறும் அடைந்த அலுப்பும், அச்சமும், அவலமும், களைப்பும், துன்பமும் திருவுளத்தடைத்து இரங்கியருளி அழியாப் பெருவாழ்வைப் பெறுதற்கரிய உயர் அறிவுடைய இம்மனித தேகத்தில் செலுத்தியருளிய தேவரீரது பெருங்கருணைக்கு நாங்கள் செய்யும் கைம்மாறு ஒன்றும் தெரிந்தோமில்லை" என்று இறைவனிடம் வள்ளல் பெருமானார் முறையிடுகிறார். இதிலிருந்து நாம் அனைவரும் நமக்குக் கிடைத்திருக்கின்ற மனிதப்பிறவியின் மேன்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

சரி இத்தனை பிறவிகள் கழித்து ஏன் இறைவன் நமக்கு இந்த மனிதப் பிறவியை கொடுக்க வேண்டும்? என்ற கேள்வியை எழுப்பினால் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களைப் பெறுவதற்கே என்று ஆன்றோர்கள் பகருகின்றனர்.

அதாவது அற நெறியில் வாழ்ந்து வீடுபேற்றினை அடையவேண்டும் என்பதே மனிதப் பிறப்பின் நோக்கம். இங்கே வீடுபேறு என்பது இறைவனின் அருளை அடைதல் எனப் பொருள்படும். இதனைத்தான் ஔவை "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" எனத் தொடங்கி "தானமும் தவமும் தான் செய்வாராகில் வானவர் நாடு வழி திறந்திடுமே" என்று அருளியுள்ளார்கள்.

இதை மணிவாசகப் பெருந்தகையும் "புல்லாகிப் பூடாய்" என்ற வரிகளின் இறுதியில் "மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்" எனத் தெள்ளத் தெளிவாக அருளியுள்ளார்.

இதை ஒட்டியே நம் வள்ளல் பெருமானாரும் "நாம் பல பிறவிகளையும் தப்பி மேலான இந்த மனிதப் பிறப்பெடுப்பது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளைப் பெறுவதற்கே. எவ்வித முயற்சி செய்தாவது அந்த அருளை அடைய வேண்டும்" என்று அருளியுள்ளார்கள்.

*இறையருளை நாம் ஏன் பெற வேண்டும்?*

***'அருளலாது அணுவும் அசைந்திடாது அதனால்***

***அருள்நலம் பரவுகென்று அறைந்த மெய்ச்சிவமே'*** *– அகவல் (978)* *என்கிறார் நம் பெருமானார். இதற்கு உதாரணம்:*

*நாம் ஒரு சிம்கார்டைப் பயன்படுத்துகிறோம். அந்த சிம்கார்டில் தற்போது நாம் பயன்படுத்துகின்ற சேவைகளில் திருப்தி இல்லாவிட்டாலோ அல்லது புதிதாக ஒரு சேவையை பெற விரும்பினாலோ அந்த சிம்கார்டு கம்பெனியின் உதவிகொண்டுதான் நாம் பயன்படுத்துகின்ற சிம்கார்டின் சேவையில் மாற்றத்தைக் கொண்டுவர முடியும். நாமாக எந்த ஒரு சேவையையும் பெறவோ மாற்றவோ இயலாது. ஏனெனில், அந்த சிம்கார்டானது ஒருகட்டுப்பாட்டிற்கும், ஒருவித ஆற்றலுக்கும் உட்பட்டு இயங்குகிறது. அதுபோல், நமது வாழ்க்கையில் ஒருமாற்றத்தை(முன்னேற்றத்தைக்) கொண்டுவர விரும்பினால் நாமாக அதனை செய்துவிட முடியாது. இப்பூமியில் நாம் நம்முடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு நம் வாழ்க்கையை மாற்றிக் கொள்ளவோ, உயர்த்தவோ இயலாது. அதற்கு அருளின் துணை வேண்டும். அருளின் துணையின்றி நம்மால் தனித்து எதுவும் செய்ய இயலாது.*

*நம் வாழ்க்கையில் நாம் சுகமாக வாழ்வதற்கு அருளின் துணை மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இதனை*

***'அருளுறின் எல்லாம் ஆகும் ஈதுஉண்மை***

***அருளுற முயல்கவென்று அருளிய சிவமே'*** *– அகவல் (980)* *என்று வள்ளல் பெருமானார் அகவலில் நமக்கு சுட்டிக் காட்டுகிறார்.*

*திருவள்ளுவர் இதனை*

***'நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றான்***

***தேரினும் அஃதே துணை'*** *– திருக்குறள் (242) என்கிறார்.*

*இவ்வாறு, நம்முடைய வாழ்க்கையில் எந்த ஒரு செயலையும் செய்து முடிக்க வேண்டுமானாலும் இந்த வாழ்க்கையை நமக்குக் கொடுத்த இறைவனுடைய அருள் தேவைப்படுகிறது. மற்ற பிறவிகளில் அருளைப் பெற இயலாது.* ***மனிதப் பிறவியில் மட்டும்தான் அருளைப்பெற முடியும்.*** *அருளைப் பெறுவதற்காகவே இந்த மனிதப் பிறவி நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நாம் இப்போது என்ன செய்துகொண்டு இருக்கிறோம் என்று பெரியோர்கள் கூறும் கதை ஒன்றினைப் பார்ப்போம்.*

*ஒரு ஊரில் விவசாயி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தினமும் விடியற்காலையில் தோட்டத்திற்கு சென்று உழைக்க ஆரம்பித்தால் இரவு நேரம் தான் வீட்டிற்கு வருவார். இவ்வாறு பல வருடங்களாக கடினமாக உழைத்து வந்தார். கருணையே வடிவான இறைவன் விவசாயிமீது இரக்கப்பட்டு அவருக்கு காமதேனு என்ற தேவலோக பசுவை கொடுத்தார். 'இந்த காமதேனுவை பயன்படுத்தி நீ சுகமாக*

வாழலாம்' என்று கூறி அருளினார். காமதேனுவின் சிறப்பு என்னவென்றால் அதனிடம் எதைக் கேட்டாலும் அதை கொடுக்கும் ஆற்றல் வல்லது. செல்வம் கேட்டால் செல்வம் கிடைக்கும், உணவு கேட்டால் உணவு கிடைக்கும், அழகான உடைகள் கேட்டால் உடைகள் கிடைக்கும், அழகிய விலையுயர்ந்த நகைகள் கேட்டால் நகைகிடைக்கும் இப்படி எந்தவொரு பொருளையும் கொடுக்க வல்லது இந்த காமதேனு. ஆனால் அந்த விவசாயி புத்திசாலியாக பயன்படுத்துகிறோம் என்று நினைத்து தான்பெற்ற அறிவை கொண்டு அந்த காமதேனுவிடம் 'எனக்கு இரண்டு மாடுகள் வேண்டும்' என்று கேட்டு உழுவதற்கு பயன்படுத்தினான். இந்தக் கதையில் வருகின்ற அந்த விவசாயி தன்னுடைய அறிவைப் பயன்படுத்தி சிறப்பாகச் செய்கிறோம் என்று நினைத்து முட்டாள்தனமாக செய்ததைப் போன்றே நாம் அனைவரும் நம்முடைய சிற்றறிவை பயன்படுத்தி பெறுதற்கு அரிய இந்த மனிதப் பிறவியை வீணாக்குகின்றோம். கடவுள் கருணையால் கொடுத்த இந்தப் பிறவியை சரியாகப் பயன்படுத்தாமல் வீணாகப் பொழுதைக் கழிக்கின்றோம். இதனை நம் வள்ளல் பெருமானார் பேருபதேசத்தில் **'இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரைக்கும் இருந்ததுபோல் இனியும் வீண்காலம் கழித்துக் கொண்டிராதீர்கள்'** என்று எச்சரிக்கிறார். மேலும் **'உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்ம லாபத்தை காலமுள்ளபோதே அறிந்து அடைய வேண்டும்'** என்கிறார்.

ஆகவே மெய்யன்பர்களே! வாழ்க்கையில், நாட வேண்டிய இறைவனை நாடி, பெற வேண்டிய அருளை பெற்று, அடைய வேண்டிய இன்பத்தை அடைந்து உய்வோமாக!

**திருச்சிற்றம்பலம்**



## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்



அன்பு உள்ளங்களே! கடந்த 10 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.

இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் 8012680865**

# தெய்வத் தீந்தமிழ் திருஅருட்பா



*அன்பு உள்ளங்களே!*

*நம் நடக்கும் காலத்திலும், நீராடுங் காலத்திலும், சயன காலத்திலும் நமக்கு தெரியாமலே பலஜீவராசிகள் துன்பப்படவும் இறக்கவும் நேரிடுகின்றது. இதனால் நமக்கு பல பாவங்கள் ஏற்படுகின்றது. இவை நம் மனதிற்கு புலப்படாமலும் நேரிடும். இவ்வாறு நாம் அறியாமல் செய்யும் பாவங்கள் யாவும், தினம் செய்யும் ஜபத்தாலும், பாராயணத்தாலும், ஸ்தோத்திரத்தாலும், விருந்து உபசரித்தலாலும், தெய்வம் பராவலாலும் நீங்கும். ஆகவே நாம் வள்ளல் பெருமானார் அருளிய திருவருட்பா எனும் அருட்பாசுரங்களை நாளும் ஓதி பாவங்களிலிருந்து நீங்கி உய்வோமாக.*

சிரத்தை ஆதிய சுபகுணம் சிறிதும்
சேர்ந்திலேன் அருட் செயலிலேன் சாகா
வரத்தை வேண்டினேன் வந்து நிற்கின்றேன்
வள்ளலே உன்றன் மனக்குறிப் பறியேன்
கரத்தை நேர்உளக் கடையேன் என்றெனைநீ
கைவிடேல் ஒருகணம் இனி ஆற்றேன்
தரத்தை ஈந்தருள்வாய் வடல் அரசே
சத்தியச் சபைத் தனிப்பெரும் பதியே. 1

பத்தியம் சிறிது உற்றிலேன் உன்பால்
பத்தி ஒன்றிலேன் பரமநின் கருணை
மத்தியம் பெற வந்து நிற்கின்றேன்
வள்ளலே உன்றன் மனக்குறிப் பறியேன்
எத்தி அஞ்சலை என அருளாயேல்
ஏழையேன் உயிர் இழப்பன் உன்ஆணை
சத்தியம் புகன்றேன் வடல் அரசே
சத்தியச் சபைத் தனிப்பெரும் பதியே. 2

தூய நெஞ்சினேன் அன்றுநின் கருணைச்
சுகம் விழைந்திலேன் எனினும்பொய் உலக
மாயம் வேண்டிலேன் வந்து நிற்கின்றேன்
வள்ளலே உன்றன் மனக்குறிப் பறியேன்
ஈய வாய்த்தநல் தருணம் ஈதருள்க
எந்தை நின்மலர் இணையடி அல்லால்
தாயம் ஒன்றிலேன் தனிவடல் அரசே
சத்தியச் சபைத் தனிப்பெரும் பதியே. 3

திருச்சிற்றம்பலம்

# பொய் எனும் போர்வை

நம் அனைவருக்குள்ளும் கற்பனைத் திறன் இருக்கிறது என்பதற்கு ஒரே எடுத்துக்காட்டு, பொய் சொல்லுவதுதான்!

பொய் சொல்பவன், தன் கற்பனையைப் பயன்படுத்தத் துவங்குகிறான். சூழ்நிலைக்கு ஏற்ப அவன் மனம் கற்பனையான நிகழ்வை உருவாக்குகிறது. பொய்யின் வெற்றியே அதன் உடனடித் தன்மைதான். பொய்யின் விதைகளாக இருப்பவை, சொற்களே!

ஒத்திகை பார்த்துச் சொல்லப்படும் பொய்கள் பெரும்பாலும் பல் இளித்துவிடுகின்றன. மேஜிக் செய்பவன் வெறும் கையால் பூக்களை வரவழைப்பதைவிடவும், நினைத்த நேரத்தில் நினைத்த பொய்யைச் சொல்லி எதிராளியை நம்பவைப்பதுதான் பெரிய மேஜிக்!

உண்மை வெளியாவதற்குத்தான் பல வருட காலம் தேவைப்படுகிறது. பொய் எப்போதும் நம் நாக்கின் நுனியில் காத்திருக்கிறது. பல வேளைகளில் நாம் சொன்ன பொய்கள், வேறு உருவம்கொண்டு நம்மிடமே திரும்பி வந்து சேர்கின்றன. உலகிலே மக்கள் அதிகம் பயன்படுத்துவது, **பொய்**தான். அதில் மொழி, தேசம், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதமில்லை. பொய் சொல்வதற்கு எந்த அளவும் இல்லை. வயதும் இல்லை.

சராசரியாக ஒரு மனிதன் தன் வாழ்நாளில் எவ்வளவு பொய் சொல்லியிருப்பான் என்று ஒருநாள் யோசித்துப் பாருங்கள். நினைக்கவே பயமாக இருக்கும். பொய் என்பது ஒரு ருசி. அது பால்ய வயதில் நமக்கு அறிமுகமாகிறது. பொய்யை மெய்யிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாத வயது என்பதால் பொய்யை அப்படியே நம்பிவிடுகிறோம். அது பொய் என்ற விவரம் தெரியத் துவங்கியதும், நாமும் ஆசை ஆசையாகப் பொய்களைச் சிருஷ்டிக்கத் துவங்குகிறோம்.

முதல் பொய்யை எப்போது சொன்னோம் என்று உங்களில் யாருக்காவது நினைவிருக்கிறதா? யார் உங்கள் பொய்யை நம்பிய முதல் நபர்? என்ன பொய் அது? எதற்காக இந்தக் கேள்வி என்றால் பொய்யின் சகலகோடி வகைகளையும் நாம் பிரயோகித்துப் பார்த்து, அற்ப வெற்றிகளும் பெரும்பான்மைத் தோல்விகளுமே அடைந்திருக்கிறோம். எப்படித் துவங்கியது நம் பொய் சொல்லும் பயிற்சி என்று பின்னோக்கிச் சென்று தெரிந்துகொள்ள முடியுமா? என்பதற்காகத்தான் இந்தக் கேள்வி.

நாம் வளர வளர, நம்மோடு பொய்களும் வளர்கின்றன. சிறு வயதில் சொன்ன பொய்கள், இன்று கேள்விக்கு உரியவையாக இருக்கின்றன. உடல் வளர்ச்சிகூட குறிப்பிட்ட வயதுடன் நின்றுவிடுகிறது. பொய்

*வளர்வது, நிற்பதே இல்லை.*

*பொய்யை உண்டாக்கவும் பிரயோகிக்கவும் பயின்றவுடன், அதன் பெயரை மாற்றிக்கொள்கிறோம். சிலர், 'அதைத் திறமை என்கிறார்கள், சிலர் அதைச் சாதுர்யம் என்றும், சிலர் தொழில் தர்மம்' என்றும் சொல்கிறார்கள். அவரவர் விருப்பத்திற்கேற்ப பொய் புதிய பெயரும், புதிய பொலிவும் கொண்டுவிடுகிறது.*

*பொய் சொல்வது சரியா தவறா? முடிவற்ற இந்த விவாதம் காலங்காலமாகத் தொடர்கிறது. இந்த ஆய்வு விவாதம் நோக்கியதல்ல. மாறாக, எதற்காக ஒரு மனிதன் பொய் சொல்கிறான்? எப்படி ஒரு பொய் உண்டாக்கப்படுகிறது? பொய் ஏன் இவ்வளவு கவர்ச்சியாக இருக்கிறது? பொய் சொல்லத் தயங்காத நாம், மற்றவர்களால் பொய் சொல்லி ஏமாற்றப்படும்போது மட்டும் ஏன் கோபப்படுகிறோம்? என்பதைப் பற்றியது.*

*எல்லாப் பொய்களும் ஓர் இடைவெளியை உருவாக்குகிறது. தற்காலிகமான சந்தோஷத்தையும் தப்பித்தலையும் ஏற்படுத்துகிறது. ஒருமுறை நண்பரின் வீட்டில், ஹாலில் இருந்த டெலிபோன் மணி அடித்தது. நண்பரின் மகள் போனை எடுத்தாள். மறுமுனையில் யாரோ நண்பரைக் கேட்டார்கள். போனை ஒரு கையால் பொத்தியபடியே, அந்தச் சிறுமி, 'அப்பா! நீ வீட்ல இருக்கியா, இல்லையா?' என்று கேட்டாள். நண்பர், 'நான் வீட்ல இல்லையே' என்றதும், அந்தச் சிறுமி, 'அப்பா வீட்ல இல்லை' என்று சொல்லிப் போனை வைத்துவிட்டு, சிரித்தபடியே அவரின் அருகில் சென்றாள். 'சமர்த்துக்குட்டி' என்று நண்பர் தன் மகளைத் தூக்கிக் கொஞ்சினார். குழந்தை தன் உதட்டில் ஒட்டியிருந்த பொய்யின் மீதத்தைத் துடைத்தபடியே சிரித்தது.*

*மீன் எப்படி தன் குஞ்சுகளுக்கு நீந்தக் கற்றுத்தருவது அவசியமில்லையோ, அப்படி குழந்தைகள் பொய் சொல்வதற்குப் பெற்றோர் கற்றுத்தர வேண்டிய அவசியம் இன்றி, தானே அறிந்துகொண்டுவிடுகிறார்கள். பொய் என்று ஒன்று கண்டு பிடிக்கப்படாமல் இருந்தால், வாழ்வு சுவாரஸ்யமற்றுப் போயிருக்குமோ?*

*பொய் எவ்வாறு நம் வாழ்வோடு கலந்திருக்கிறது என்பதை பார்ப்போமா!*

*நவீன நகரமாம் புது புலியூரில் இராமன் குடும்பம் வசித்து வந்தது. இராமன் அந்நகரில் புதிதாக விற்பனைக்கு வந்த ரோபோக்களை பார்க்க கடை வீதிக்கு சென்றார். அதில் ஒரு ரோபோ பொய் சொல்பவர்களை எளிதில் கண்டு பிடித்துவிடும். அதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு தண்டனையும் வழங்கும். இவ்வதிசய ரோபோவைப் பார்த்ததும் இராமனுக்கு பிடித்து போய்விட்டது.*

*உடனே அதனை விலை கொடுத்து வாங்கி தன் வீட்டிற்கு எடுத்து*

வந்தார். அதை தன் மனைவிக்கு அறிமுகம் செய்தார். இரவு தாமதமாக வீட்டிற்கு வந்த தன் மகனை “ஏன்டா இவ்வளவு நேரம் எங்கடா போயிருந்த?” என்றார். அதற்கு மகன், “நான் என் நண்பன் வீட்டிற்கு படிக்க சென்று வந்தேன்” என்றான். உடனே ரோபோ வேகமாக நகர்ந்து வந்து அவன் கன்னத்தில் ஒரு அறை விட்டது. இதை சற்றும் எதிர்பாராத மகன், கோபமாக தன் தந்தையை பார்த்தான். தந்தை, “இது புதிதாக நம் வீட்டிற்கு வந்துள்ளது. யார் பொய் சொன்னாலும் இது உடனே காட்டி கொடுத்துவிடும்” என்றார். “இப்போது சொல் நீ எங்கே சென்றாய்?”, “என் நண்பர்களுடன் சினிமாவிற்கு சென்றேன்.” என்றான். உடனே தந்தை, “நாங்கள் எல்லாம் படிக்கும் காலத்தில் இப்படி எல்லாம் ஊர் சுற்ற மாட்டோம் தெரியுமா” என்றார். இம்முறை ரோபோ வேகமாக தந்தையிடம் நகர்ந்து அவரை ஒரு அறைவிட்டது. மனைவி வேகமாக வெளியில் வந்து பார்த்தார், இம்முறை யார் அடிவாங்கியது என்று, மனைவியும் “உங்கள் இருவர் போல நான் இருந்ததே கிடையாது...” என்று சொல்லி முடிக்கும்முன் ரோபோ வேகமாக மனைவியிடம் நகர்ந்து அவளுக்கும் ஒரு அறைவிட்டது. மொத்த குடும்பமே தலை குனிந்தது.

இவ்வாறு, மெய், பொய் என்று பேதம் பிரிக்க முடியாதபடி, பொய் நம் வாழ்வில் கலந்து இருக்கிறது.

அற்பப் பொய்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. வரலாறு என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள பொய்கள், பன்னாட்டு வணிக நிறுவனங்கள் சொல்லும் பொய்கள், அரசாட்சியின் பெயரால் நடைமுறைப்படுத்தப்படும் பொய்கள் யாவும் எந்த எதிர்ப்பும் இன்றி அங்கீகரிக்கப்பட்டு விடுகின்றன.

இன்று, மூச்சுத் திணறுமளவிற்கு பொய்கள், பொது மேடைகளிலும், ஊடகங்களிலும் பொங்கி வழிகின்றன. பச்சோந்தியாவது தன்னை எதிரிகளிடமிருந்து மறைத்துக் கொள்வதற்குத்தான் நிறம் மாற்றிக்கொள்கிறது. நாமோ நம்மை அடையாளம் காட்டிக் கொள்வதற்குத்தான் அதிகம் பொய் சொல்கிறோம்.

கடவுள் மீதான பயம்தான் இதுநாள் வரை பொய்யைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. பொய் சொன்னால் ஏதாவது நடக்கும் என்று மூதாதையர்கள் பயந்தார்கள். ஆனால், பூட்டைத் திறக்கப் பயன்படும் கள்ளச் சாவிகளைப் போல பொய்களும் செலவாணி (எக்ஸ்சேஞ்ச்) செய்யக்கூடியவை என்று உணர்ந்த பிறகு, அந்தப் பயம் மெல்ல நம்மைவிட்டுப் போய்விட்டது.

சாதாரணமாக நாம் பொய் என்பதை வெறும் தவறு என்று மட்டுமே நினைத்து கொண்டிருக்கிறோம். ஆனால் பொய் என்பது உலகிலேயே மிகப் பெரிய பாவங்களான பஞ்சமகா பாவங்கள் ஐந்தினுள் ஒன்றாகும். இது நம்மில் எத்தனை பேருக்கு தெரியும்.

பொய் என்பது கற்பனையாக பேசுவது, குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட செயலை செய்ய முடியாது போவது, மறந்து விடுவது. இன்னும் நம்மில் பலபேர் யாருக்கும் உண்மையில்லாமல் பொய்யாகத் தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

இவ்வாறு பொய் நம் வாழ்வில் பலவிதமாக பரிணமிக்கின்றது. ஆகையால் மேல்சொன்னபடி இருப்பது நாம் இயற்கைக்கும் கடவுள் நமக்களித்திருக்கும் வாழ்க்கை என்னும் பொன்னான நேரத்திற்கும், அவற்றை வீணடித்து விட்டு துரோகம் செய்வதாகும். இதை நாம் தவறாது உணர வேண்டும். அதற்கு நம்முடைய ஒவ்வொரு செயலையும் கவனித்தாலே நமக்கு புரியும், எந்த இடத்தில் நாம் பொய்யிற்க்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகிறோம் என்று.

நாம் பொய்யை தவிர்க்க வேண்டுமானால் முதலில் அதற்கான சந்தர்ப்பத்திலிருந்து தப்பிக்க வேண்டும். இதுவே வழி.

திருச்சிற்றம்பலம்

## மூத்தோர்சொல் அமிர்தம்

ஒரு மதகுரு மறைந்த பின்னர் அவரது சீடர் அந்த இடத்திற்கு வந்தார். முன்னர் இருந்த குரு செய்த அனைத்தையும அவர் அடியோடு தலைகீழாக மாற்றினார். பலருக்கு இது பிடிக்கவில்லை. எனினும் குருவை குறைகூற எவருக்கும் துணிவில்லை. எனவே அரசனின் காதில் இதனைப் போட்டு வைத்தனர்.

மன்னனுக்கு மத விஷயங்களில் ஈடுபட்டு விசாரணை செய்ய இஷ்டமில்லை. எனினும் இவர்களது தொந்தரவுக்காக விசாரிக்க விரும்பினான். ஒருமுறை நேரில் சென்று குருவை சந்தித்தான். வணங்கிய மன்னனை வரவேற்ற குரு ஆசனமளித்து அமர வைத்தார்.

பேச்சுவாக்கில் மன்னன் கேட்டான், "நீங்கள் முந்தைய குரு மாதிரி இல்லையே?" என்று.

"யார் சொன்னது? முழுக்க, முழுக்க அவரைப் பின்பற்றும் ஒரே சீடன் நான்தான்" என்றார் குரு.



''நீங்கள் அவரைப்போல் இல்லை என்கிறார்களே? அவர் செய்து வந்த பலவற்றையும் நீங்கள் மாற்றி விட்டீர்களாமே?"

"உண்மை'' என்றார் குரு. எனக்கு முன் இருந்த எனது குரு

கண்மூடித்தனமாக எவரையும் பின்பற்ற மாட்டார். தானே சுயமாக சிந்தித்து முடிவெடுப்பார். நான் அவரையே பின்பற்றுவதால் நானும் அப்படியே எதையும் கண்மூடித்தனமாக தொடர்வதில்லை. சுயமாக சிந்தித்து முடிவு எடுக்கிறேன்.

எந்த ஒன்றையும் கண்மூடித்தனமாக எதிர்ப்பதோ, கண்மூடித்தனமாக ஆதரிப்பதோ இரண்டுமே தவறானவை. ஆதரிப்பது, எதிர்ப்பது இரண்டுக்கும் முன்னால் அது என்ன என்பதை உணர வேண்டும். உணர்ந்த பின்னர் அதை ஏற்பதா, மறுப்பதா என்று முடிவு செய்யலாம்.

உணர்ந்து செய்யப்படாத ஒரு காரியம் அது சரியாக செய்யப்பட்டதாக இருந்தாலும் கூட அதில் பொருளில்லை. உணர்ந்து செய்தால் அது தவறாயிருப்பினும் நன்றே. தவறைத் திருத்திக் கொள்ள நிச்சயமாக அதில் வழி உண்டு. ஒன்றை உணராமல் அதை கண்மூடித்தனமாக பின்பற்றுபவர்களை மாற்றுவது எளிதான காரியம் அல்ல.

கலையுறைத்தே கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக.....

– திருவருட்பா, வள்ளல் பெருமானார்

அது ஒரு அழகிய சிறு கிராமம். அங்கு இனியா என்ற சிறுமி இருந்தாள். இப்பொழுதுதான், தனது கிராமத்தில் தொடக்க பள்ளியை முடித்திருந்தாள். அவள் தன் மேல்நிலை படிப்பிற்காக அருகிலுள்ள நகரத்திற்கு செல்ல வேண்டியிருந்தது. நகரத்தில் மிகவும் பெயர் பெற்ற பள்ளியில் தனக்கு இடம் கிடைத்ததால் மட்டற்ற மகிழ்ச்சியிலிருந்தாள்.

அன்று பள்ளிக்கு முதல் நாள், தனது பள்ளி வாகனத்திற்காக காத்திருந்தாள். பள்ளி வாகனம் வந்தவுடன், விரைவாக வண்டியில் ஏறி அமர்ந்து கொண்டாள். அவள் மிகுந்த ஆவலுடனும், ஆர்வத்துடனும் இருந்தாள்.

வாகனம் பள்ளியை சென்றடைந்தவுடன் எல்லா மாணவர்களும் தங்களது வகுப்பறைக்கு செல்லத் துவங்கினர். இனியாவும் தனது வகுப்பறையை சகமாணவர்களிடம் விசாரித்துச் சென்றடைந்தாள். வகுப்பறையில் மாணவர்கள் அவளது எளிமையான உடையையும், கிராமத்திலிருந்து வந்திருப்பதையும் அறிந்துகொண்டு அவளை எள்ளி நகையாடினர். அந்நேரத்தில் வகுப்பு ஆசிரியை உள்ளே நுழைந்தார். மாணவர்கள் அனைவரையும் அமைதி காக்கும்படி அறிவுறுத்தினார். ஆசிரியை இனியாவை அழைத்து அனைத்து மாணவர்களிடமும் அறிமுகம் செய்து வைத்தார். பிறகு வகுப்பை தொடங்கினார். உங்களிடம் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். அனைவரும் தயார்நிலையில் இருங்கள் என்று கூறியபின் ‘எனது

கேள்வியானது உலகிலுள்ள ஏழு அதிசயங்கள் என்னென்ன?' என்று கேட்டார். அனைவரும் வேகமாக எழுத ஆரம்பித்தனர். இனியா மெதுவாக எழுத ஆரம்பித்தாள். மாணவர்கள் அனைவரும் சிறிது நேரத்தில் எழுதிமுடித்து ஆசிரியரிடம் விடைத்தாளை கொடுத்துவிட்டனர். இனியா விடைதாளை கொடுக்காததால் ஆசிரியை எழுந்து வந்து அவளிடம் ''என்ன ஆயிற்று இனியா? இவர்களெல்லாம் இரண்டு நாட்களுக்கு முன்னால்தான் இதைபற்றி படித்திருந்தார்கள் அதனால் அவர்கள் வேகமாக எழுதி முடித்துவிட்டார்கள். உனக்கு என்ன தெரியுமோ அதை எழுது'' என்று கூறினார். அதற்கு அவள் ''நிறைய இருக்கிறது ஆனால் எந்த ஏழு அதிசயத்தை எழுதுவது என்று தெரியவில்லை'' என்றாள். சிறிதுநேரம் எழுதிவிட்டு விடைத்தாளை ஆசிரியையிடம் கொடுத்தாள். ஆசிரியை எல்லா மாணவர்களின் விடைத்தாளையும் படிக்க ஆரம்பித்தார். அதில் பல மாணவர்கள் விடையை சரியாக எழுதியிருந்தனர். சீனப்பெருஞ்சுவர், தாஜ்மஹால், பிரமிடு போன்றவற்றை மாணவர்கள் தான் சொல்லிக் கொடுத்தவற்றை சரியாக எழுதியதை கண்டு ஆசிரியை மகிழ்ந்தார். கடைசியாக இனியாவின் விடைத்தாளை படிக்க ஆரம்பித்தார் அதில் ஏழு அதிசயங்களாவன நம்மால் ''**பார்த்தல்** (To be able to **See**), **கேட்டல்** (To be able to **Hear**), **உணர்தல்** (To be able to **Feel**), **சிரித்தல்** (To be able to **Laugh**), **யோசித்தல்** (To **Think**), **கனிவுடன் இருத்தல்** (To be **Kind**), **பிறரை நேசித்தல்** (To **Love**)!''



இதைப்படித்த ஆசிரியை ஸ்தம்பித்து போனார். மொத்த வகுப்பும் வாயடைத்து போனது. இன்றைக்கு ஒரு சிறிய கிராமத்திலிருந்து வந்த சிறுமி உண்மையான, அதிசயமான, விலைமதிப்பற்ற பரிசை கடவுள் நமக்கு அளித்ததை நினைவூட்டினாள்.

புறத்தில் உள்ளதை பார்த்து அதிசயம் என்று கொண்டாடி கொண்டிருக்கிறோம். உண்மையில் அதிசயம் நம்முள்ளேயே இருக்கின்றது. ஆனால் அதனுடைய மதிப்பு தெரியாமல் இருக்கிறோம், அதை பயன்படுத்த வேண்டும், நம்ப வேண்டும்.

**"உனக்கு தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன." – விவேகானந்தர்**

திருச்சிற்றம்பலம்

**Advertisement**

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS

Wings of Wisdom

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

**Books for All Ages**

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

## SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

**Deposit INR - 500/**



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

| AYYAPPAN THANGAL | VALASARAVAKKAM | PORUR | OMR | VADAPALANI |
|---|---|---|---|---|
| 26792007 | 42105700 | 42107304 | 42863478 | 42642491 |



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

Suriyaa Digital
Porur - 9677227755

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

- தவத்திரு ஊரன் அடிகளார், வடலூர்

**கூறிய கருநிலை குலவிய கீழ்மேல் 223**
**ஆறியல் என உரை அருட்பெருஞ்ஜோதி 224**

**கூ**றிய குலவிய என்ற இருசொற்களையும் அடைமொழிகளாகக் கொண்டு, கூறிய கருநிலை கீழ், குலவிய மேல் ஆறியல் என அன்வயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மனித உடம்பில் ஆறு ஆதாரங்கள் உள்ளன.

1. மூலாதாரம் - குதத்துக்கும் கோசத்துக்கும் நடு
2. சுவாதிட்டானம் - கோசத்துக்கும் நாபிக்கும் நடு
3. மணிபூரகம் - நாபி, கொப்பூழ்
4. அனாகதம் - இருதயம்
5. விசுத்தி - கண்டம், கழுத்து
6. ஆக்ஞை - புருவமத்தி

இவ்ஆறு ஆதாரங்களில் கீழே உள்ள மூலாதாரமும் மேலே உள்ள புருவமத்தியும் மிக முக்கியமானவை.

மூலாதாரம் - உடம்பின்நடு (Body Centre)

புருவமத்தி - சிரத்தின் நடு (Head Centre)

**மூலாதாரம்**

உடம்பிற்கே மூல ஆதாரம் மூலாதாரம். இது உடம்பிற்கு அச்சுப்போன்றது. சரியாக நடுவில் இருப்பது.(Centre of the Body). உடம்பின் அளவு 96 அங்குலம். இதில் மேலே 471/2, கீழே 471/2 தள்ளி இடையிலுள்ள 1 அங்குலம் மூலாதாரம். எருவிடும் வாசலுக்கு இரண்டு விரல் மேலே, கருவிடும் வாசலுக்கு இரண்டு விரல் கீழே என்று திருமூலர் இதனை அருமையாகக் கூறுவார்.

எருவிடும் வாசல் - குதம்; ஆசனவாய்; எருவாய்

கருவிடும் வாசல் - குய்யம்; கோசம்; குறி; கருவாய்

**புருவமத்தி**

இது, ஆதாரம் ஆறினுள் ஆறாவது. ஆக்ஞை எனப் பெயர் பெறுவது. ஆக்ஞை - ஆணை, கட்டளை. எல்லா இடங்களுக்கும் கட்டளையிடும் இடமாதலால் ஆக்ஞை ஆயிற்று. ஆன்மாவின் யதாஸ்தானம் இதுவே. ஜாக்கிரஸ்தானம். இதற்குப் பல பெயர்கள் உண்டு. விந்துஸ்தானம், அறிவிடம், லலாடம், முச்சுடரிடம், முச்சந்திமூலம், முப்பாழ், மகாமேரு, பாலம், கபாடஸ்தானம், சபாத்துவாரம், சிற்சபை, நெற்றிக்கண், புருவமத்தியமூலம் என்னும் பெயர்கள் வள்ளற் பெருமானின் உபதேசங்களிற் காணப்பெறுகின்றன.

*மூலாதாரத்தைக் கீழ்மூலம் என்றும், புருவமத்தியை மேல்மூலம் என்றும் கூறும் ஒரு வழக்குண்டு. அதுபற்றியே புருவமத்தியமூலம் என்று பெருமான் குறிப்பிட்டார்.*

*புருவமத்தியே சிற்றம்பலம், ஞானசபை. இங்கேதான் நாம் இறைவனைக் காண வேண்டும்.*

***நெற்றிக்கு நேரே நிறைந்த ஒளிகாணில்***
***முற்றும் அழியா துடம்பு. 238***

***புருவத்திடை யிருந்து புண்ணியனைக் காணில்***
***உருவற்று நிற்கு முடம்பு. 243***

*என்பன ஔவைக் குறள்.*

*இந்தத் தேகத்தில்* ***புருவமத்தி****யில் நமது ஆன்ம அறிவென்கின்ற கற்பூரத்தில் கடவுள் அருளென்கின்ற தீபம் விளங்குவதாகப் பாவித்துப் பார்த்து, அதில் பழகிப் பழகிக் கடவுளிடத்தே உண்மையாகிய அன்பையும், ஜீவர்களிடத்தே உண்மையான காருணியத்தையும் இடைவிடாமல் வைத்து மகா மந்திர ஞாபகஞ் செய்தல் வேண்டும். – பெருமானார்*

*எக்காலத்தும்* ***புருவமத்தி****யின் கண்ணே நம்முடைய கரணத்தைச் செலுத்த வேண்டும். – உபதேசக்குறிப்பு*

*“நாம் நெற்றியிலிருக்கும் நடுக்கண்ணை ஆசாரியர் அனுக்கிரகத்தால் திறக்கப்பெற்றுக் கொள்வது நலம். ஏனெனில் மேற்படி நெற்றிக்கண்ணைத் திறக்கப்பெற்றுக் கொண்டவனுக்கு எல்லா அனுபவங்களும் பட்டப் பகல்போல் தெரியும். அவன்தான் சுத்த ஞானி. மேற்படி ஞானி தயவோடு ஒரு பிரேதத்தைப் பார்த்த மாத்திரத்தில் பிரேதம் உயிர்பெற்றெழும். மேற்படி ஞானிக்கு ஆன்மாக்களது அபக்குவபரிபாகத்தால் சினம் தோன்றினால் உடனே அந்த ஜீவன் பஸ்பமாகிவிடுவான். மேற்படி ஞானிக்கு மேற்குறித்த அடையாளங்களுள. மேற்படி கண்ணைத் திறப்பதற்கு ஒரு கதவும் பூட்டுமுளது. மேற்படி பூட்டை அருளென்கின்ற திறவுகோலைக் கொண்டு திறக்கவேண்டும். ஆதலால், மேற்படி அருளென்பது ஆன்ம இயற்கையாகிய பெருந்தயவு. நாம் தயா வடிவமானால் மேற்படி அனுபவம் நேரும்.” – உபதேசக்குறிப்புகள், வள்ளல் பெருமானார்*

*புருவப் பூட்டைத் திறப்பதை திருவருட்பா பாடல்களிலும் பெருமான் கூறியருளியுள்ளார்.*

***கையறவி லாதுநடுக் கண்புருவப் பூட்டு***
***கண்டுகளி கொண்டுதிறந் துண்டு நடு நாட்டு***
***ஐயர்மிக உய்யும்வகை அப்பர்விளை யாட்டு***
***ஆடுவதென் றேமறைகள் பாடுவது பாட்டு 5258***

*இறைவன் புருவமத்தியில் விளங்குகின்றான் என்பதை*

***“கண்களிக்கப் புகைசிறிதும் காட்டாதே புருவக்***
***கலைநடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே” – 4108***

*என்று பாடுகின்றார்.*

*வள்ளற் பெருமான் புருவமத்திய அனுபவத்தை தம் இளம் பருவத்திலேயே பெற்றவர்.*

**“இனித்தசுகம் அறிந்துகொளா இளம்பருவந் தனிலே**
**என்புருவநடு இருந்தான்**
**நாடுநடு நாட்டத்தில் உற்றஅனு பவஞானம்**
**நான்இளங் காலைஅடைய**
***நல்கிய பெருங்கருணை அப்பனே” 3679***

*என்பன வள்ளலார் வாக்காகிய திருவருட்பாப் பகுதிகள்.*

*ஆறு ஆதாரங்களையும் மூலாதாரம் முதலாகப் புருவமத்தி ஈறாக வரிசைப்படுத்திக் கூறுவது ஏறுவரிசை, கீழேயிருந்து மேல்நோக்கிச் செல்லும் வரிசை. ஆறு ஆதாரங்களுக்கும் மேலே ஏழாவது நிலையாக இருப்பது சகஸ்ராரம். இதை* ***ஆயிரத்தெட்டிதழ்க் கமலம்*** *என்பர். இவ்வேழு நிலைகளை உடைய நமது உடல் ஓர் எழுநிலைமாடம். ஆணிப் பொன்னம்பலக் காட்சிப் பாடலில் வள்ளலார் இவ் எழுநிலை மாடத்தைக் குறிப்பிடுகிறார்.*

*முதல் நிலையாகிய கருநிலை (மூலாதாரம்) கீழே இருக்கிறது, உடம்பின் கீழ்ப்பாதியில், கீழ்ப்பாதியின் மேலெல்லையில் இருக்கிறது, ஏனைய ஆறு நிலைகளும் உடம்பின் மேற்பாதியில் உள்ளன.*

*இனி, அகவல் வரிகளுக்கு வருவோம்.*

***கூறிய கருநிலை குலவியகீழ், மேல்***
***ஆறியல் எனஉரை அருட்பெருஞ்ஜோதி*** *என்பதில்*

| | |
|---|---|
| *கூறிய கருநிலை* | *– கருநிலை எனக் கூறப்படும் மூலாதாரம்* |
| *குலவிய கீழ்* | *– பொருந்திய கீழ் ஆதாரம்* |
| *மேல் ஆறியல்* | *– அதற்கு மேலே உள்ளவை ஆறுநிலைகள்* |
| *என உரை* | *– என்று உரைத்தருளிய* |
| *அருட்பெருஞ்ஜோதி* | *– அருட்பெருஞ்ஜோதியே!* |

*கீழ்ஒன்று : மூலாதாரம். மேல் ஆறு : சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆதாரங்கள் ஐந்தும், அதன்மேல் உள்ள சகஸ்ராரமும் ஆகிய ஆறும். இவ்வேழு நிலைகளின் அனுபவங்கள் பெருமானால் ஆணிப் பொன்னம்பலக் காட்சியில் விரிவாகக் காண்க (திருவருட்பா 4914 – 4946).*

*வள்ளற்பெருமானது உபதேசங்களில், ‘‘1.படிகமேடை, 2.ஆயிரத்தெட்டுக் கமல இதழ், 3.ஓங்காரபீடம், 4.குண்டலிவட்டம், 5.ஜோதிஸ்தம்பம், 6.சுத்தநடனம். இவற்றை அனுபவத்தினாலறிக. இஃது நிராதார லக்ஷணம்”*

*என்றொரு குறிப்புக் காணப்படுகிறது. இது பெருமானது உபதேசங்களைக் கேட்ட அன்பர் ஒருவரால் குறித்து வைக்கப் பெற்ற*

*குறிப்பு. இக்குறிப்பைக் குறித்துவைத்த அன்பர் வரிசை மாறிக் குறித்திருக்கிறார் என்று தோன்றுகிறது.*

*1. குண்டலிவட்டம், 2. ஜோதிஸ்தம்பம், 3. படிகமேடை, 4. ஓங்காரபீடம், 5. சுத்தநடனம், 6. ஆயிரத்தெட்டிதழ்க் கமலம் என்ற வரிசையே சரியானது. இவையும் ஆறியலில் (ஆறாதார இயலில்) சேர்ந்தனவே.*

## 1. குண்டலினி

*உடம்பில் ஐம்பூத மண்டலங்கள் உண்டு.*

*பாதம் முதல் முழங்கால் வரை* **பிருதுவி மண்டலம்**
*அதன்மேல் இடைவரை* **அப்புமண்டலம்**
*அதன்மேல் மார்புவரை* **தேயுமண்டலம்**
*அதன்மேல் புருவம்வரை* **வாயுமண்டலம்**
*அதன்மேல் உச்சிவரை* **ஆகாயமண்டலம்**

*ஐம்பூத மண்டலங்களைப் போன்றே முச்சுடர் மண்டலங்கள் உண்டு. சோம சூரிய அக்கினி என்னும் மூன்று மண்டலங்கள் உண்டு.*

*சோமமண்டலம் - சிரத்தின் நடு*
*சூரியமண்டலம் - இருதயம்*
*அக்கினி மண்டலம் - மூலாதாரம்.*

*மூலாதாரமாகிய அக்கினி மண்டலத்தில் மூலாக்கினி குண்டலினி சக்தியாக இருக்கிறது. அது பாம்புபோல் குண்டல(மண்டல)மிட்டுக் கொண்டிருப்பதால் குண்டலினி எனப்படும்.* Serpent Power *என்று மேலை நாட்டறிஞர் கூறுவர். குண்டலினிப் பாம்பை யோகாக்கினியால் தட்டி எழுப்ப வேண்டும். அது சீறிப்பாய்ந்து எழும். எழுகின்ற வேகத்தில், அடைபட்டிருந்த சுழுமுனைத் துவாரம் திறக்கும். சுழுமுனை நாடி வழியாகக் குண்டலினி சக்தி மேலேறும். மேலேறு ஆறு ஆதாரங்களையுங் கடந்து சகஸ்ராரம் வரை செல்லும். சகஸ்ராரத்தில் அடைபட்டுள்ள மேல்வாயிலைத் திறந்துகொண்டு மதி மண்டலத்தில் பாயும். மதிமண்டலத்தமுதம் ஊற்றெழுந்தோடி உடலெங்கும் எழுபத்தீராயிரம் நாடிகளிலும் பாயும். ஏற்புத்துளைதொரும் ஏறும். மயிர்க்கால் தோறும் தேங்கும். திறக்கதவம் திறப்பதும் திருவமுதம் உண்பதும் இதுதான். வள்ளற்பெருமான் இவ்வனுபவங்களையெல்லாம் முற்றிலும் பெற்றார். திருவருட்பாவில் ஆங்காங்கே இவ்வனுபவங்களைக் கூறியருளியுள்ளார்.*

## 2. ஜோதிஸ்தம்பம்

*மூலாதாரந் தொடங்கிப் பிரம்மரந்திரம் வரை செல்லும் சுழுமுனை நாடியைத் தன்னுட்கொண்ட முதுகெலும்பை முதுகந்தண்டு, முள்ளந்தண்டு* (Vertebral Column; Spinal Column) *என்கிறோம். மேருதண்டம், வீணாத்தண்டு, பிரம்மதண்டம் என யோக நூல்கள் கூறும். சுழுமுனை நாடியை ஜோதிஸ்தம்பம் என்றும்*

*சிவாகாரபூரணஸ்தம்பம் என்றும் வள்ளற் பெருமானார் கூறுவார்.*

*"பிரமஸ்தானம் தொடங்கிச் சுத்த சிவஸ்தானம் வரையில் ஒருஸ்தம்பம் இருதயம் வரையில் வாயுநாடி வண்ணமாயும் அதற்குமேல் அக்கினி வண்ணமாயும் இருக்கும். இது அடியிற் பருத்து வரவர நேர்மையாய், இந்திரிய கரணங்களுக்குப் புலப்படாமல் அகண்டமாய், ஆன்மக்காட்சியில் அருகித் தோன்றுவதாய், இரண்டற நிற்கும். இதற்குச் சிவாகாரபூரணஸ்தம்பமென்று பெயர்." – உபதேசக்குறிப்புகள்*

*தம்பமேல் ஏற்றி (3881), சோதித்தம்பம் ஒன்றது (3928) தம்பத்தில் ஏற்றிய ஜோதி (4573) தம்பத்தின் மேலுக்கு மேலே (4597) ஏழ்நிலைக்கு மேலே இருந்ததோர் தம்பம் இசைந்த பொற்றம்பமடி (4927), பொற்றம்பம் கண்டேறும்போது (4928) தனக்கு நிகரிங்கில்லா துயர்ந்த தம்பமொன்றதே, தாவிப்போகப்போக நூலின் தரத்தில் நின்றதே (4964), இங்கோர் மலையின் நடுவில் உயர்ந்த தம்பம் நணுகவே (4965) மேருமலை உச்சியில் விளங்கு கம்ப நீட்சி (5262) என்பவை திருவருட்பாப் பாடல்களில் ஜோதிஸ்தம்பம் கூறப்பெறுமிடங்கள்.*

### 3. படிகமேடை

*புருவமத்தியில் இருப்பது. ஓங்காரபீடத்துக்கு ஆதாரமாக இருப்பது.*

### 4. ஓங்காரபீடம்

*புருவமத்தியில் படிகமேடையில் இறைவனும் எழுந்தருளியுள்ள பீடம்.*

***ஓங்கார அணைமீது நான்இருந்த தருணம் ...***

..........


***அவர்நானோ நான்அவரோ** அறிந்திலன்முன் குறிப்பை*
*ஊங்கார **இரண்டுருவும் ஒன்றானோம்** ஆங்கே*
*உறைந்தஅனு பவம்தோழி நிறைந்தபெரு வெளியே. 5440*

*இறைவனும் வள்ளற்பெருமானும் இரண்டறக்கலந்ததை இப்பாடலின் வாயிலாக அறிக.*

### 5. சுத்தநடனம்

*புருவமத்தியில் படிகமேடையில் ஓங்காரபீடத்தில் இறைவன் ஆடியருளும் நடனமே சுத்தநடனம்.*

### 6. ஆயிரத்தெட்டிதழ்க்கமலம்



*1008 இதழ்த் தாமரை. சகஸ்ராரம் (சகஸ்ரம் – 1000), பிரமரந்திரத்தில் இருப்பது, இதன் ஒளி ஆயிரங்கதிர்களோடு இயங்குவதே ஆயிரத்தெட்டு இதழ் என்று கூறப்படுகிறது. ஆயிரத்தெட்டு மாற்றுப் பொற்கோயில் என்பார் வள்ளற் பெருமான் (ஆணிப்பொன்னம்பலக்காட்சி 4934). கோயில்களில் ஆயிரங்கால் மண்டபங்கள்*

அமைந்துள்ள தத்துவம் இதுவே. மனித உடம்பின் தத்துவ அமைப்பை வைத்தே பண்டையக் காலத்தில் ஞானிகள் (அறிவர்கள்) கோயில் அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர். சிதம்பரம், திருவரங்கம், திருஆனைக்கா, திருவாரூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருநெல்வேலி, மதுரை ஆகிய கோயில்களில் ஆயிரங்கால் மண்டபங்கள் உள்ளன. 'பாம்பு மதியைத் தின்பது' என்பது, குண்டலி பாம்பு மதிமண்டலம் சென்று தீண்டியதன் குறிப்பே. குண்டலிப்பாம்பை ஆட்டியவரே பாம்பாட்டிச் சித்தர். பெரிய பெரிய தத்துவங்களையும் அவற்றின் அனுபவங்களையும் நம் அறிஞர்கள் புராணக் கதைகளிலும் கோயில் திருவிழாக்களிலும் வைத்துக் காட்டியிருக்கிறார்கள். ஸ்ரீரங்கம் கோயில் வைகுண்ட ஏகாதசித் திருவிழாவில் வள்ளற்பெருமான் கூறும் மேனிலை அனுபவங்கள் பலவற்றைக் காணலாம்........(விரிக்கிற்பெருகும்).

**"சுத்த சன்மார்க்கத்துக்கு அனுபவ ஸ்தானங்கள் கண்டத்துக்கு மேல்"** என்பது வள்ளற்பெருமானாரின் உபதேசம்.

கண்டம் - கழுத்து. கழுத்துக்கு மேல் தலை. பிண்டத்தில் அண்டம் தலை என்பார் வள்ளற்பெருமான்.

ஐம்பொறிகளில் மெய் தவிர ஏனைய நான்கும் தலையில்தான் உள்ளன. தலையில் நடுவிடமாக அமைந்துள்ளதே புருவமத்தி.

**புருவமத்தியைப் பற்றி ஒரு முக்கியக்குறிப்பு**




இரண்டு புருவங்களுக்கு இடையே பொட்டு இட்டுக் கொள்ளுகிற இடம்தான் புருவமத்தி என்று எண்ணலாகாது.

வலக்காதிலிருந்து இடக்காது வரை ஒரு குறுக்குக்கோடு(Horizontal line), முன்னே இரண்டு புருவங்களுக்கு இடையேயிருந்து பின்னே பிடரிவரை ஒரு குறுக்குக்கோடு, மேலே உச்சியிலிருந்து கீழே உள்நாக்குவரை ஒரு செங்குத்துக்கோடு(Vertical line) வரைந்தால், இம்மூன்று கோடுகளும் சந்திக்கும் நடுஇடமே(Central point), உள்ளிடமே(Inner centre) புருவமத்தி. அதாவது, தலையில் நடுஇடம், சிரநடு. தலையின் மத்திய இடம். இதன் அடையாளமாகவே நாம் நெற்றியில் இரு புருவங்களுக்கு மத்தியில் பொட்டு வைத்துக் கொள்கிறோம். (இதேபோல் மூக்குநுனி என்பது மேலுதட்டுக்குமேல் இரண்டு நாசித்துளைகளுக்கு நடுவே உள்ளதன்று, கண்களுக்கு மேல் புருவமத்தியின் உள்ளே உள்ள மேல்நுனியே மூக்குநுனி) ''அனுபவத்தாலறிக'' என்று வள்ளற்பெருமான் கூறுவதுபோல், "கூறிய கருநிலை குலவிய கீழ்மேல் ஆறியல் என உரை அருட்பெருஞ்ஜோதி" என்னும் அகவல் அடிகளின் உரையும் அனுபவத்தால் அறியவேண்டியதே..

## உள்ளது உரைத்தல்

# மழை



புகையின் மூன்றாவது கலையின் சீதளசக்தியினால் மழையுண்டாகின்றது. இதுபோல் சூரியகிரண உஷ்ண ஆவியாகிய புகை ஓஷதிகளிலும் நீரிலும் பாரிலும் பொருப்பிலுமுள்ள திரவசக்தியைக் கிரகித்து, வாயுமண்டலத்தில் வேர்த்து, மேலுங்கீழும் உஷ்ணம் நிரம்ப, மத்தியிலுள்ள திரவஅணுக்கள் புழுங்கி நீராய், காலபேத வண்ணம் வாயுவால் பிரேரிக்கப்பட்டு அசைக்கும் போது, கீழு மேலுமுள்ள உஷ்ணவாயு தடிப்பு விலகும்போது, மின்னலாகிய பிரகாசமும், நெருங்கி யொன்றுபடும்போது சத்தமாகிய இடியும், அத்தொனியால் படலம்போல மூடியிருந்த காராகிய மேகம் விலகி வாயுவால் கலங்கிய போது மழையும் உண்டாகும். இதன்றி, மேகம் கடல் ஜலத்தை உண்டு மழைபெய்வ தென்பது பொய்.

— உபதேசக் குறிப்புகள், திருவருட்பா உரைநடைப்பகுதி

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

## பாடலும் பொருளும்

உருத்திரர் நாரணர் பிரமர் விண்ணோர் வேந்தர்
உறுகருடர் காந்தருவர் இயக்கர் பூதர்
மருத்துவர் யோகியர் சித்தர் முனிவர் மற்றை
வானவர்கண் முதலோர்தம் மனத்தாற் றேடிக்
கருத்தழிந்து தனித்தனியே சென்று வேதங்
களைவினவ மற்றவையுங் காணே மென்று
வருத்தமுற்றாங்கு அவரோடு புலம்ப நின்ற
வஞ்சவெளியே இன்ப மயமாந் தேவே – மகாதேவமாலை (60)

*ஓரறிவுள்ள தாவரங்கள் முதல் ஆறறிவு பெற்றுள்ள மனித இனம் வரை உயிரினங்களே ஆகும். அவற்றில் மனித இனம் ஒன்றுக்கு மட்டும் தம்மைச் சுற்றி இயற்கை நடத்தி வரும் அற்புத இயக்கங்களை உணரும் அறிவும் அவை எவ்வாறு இயங்குகின்றன என்று ஆய்வு செய்கின்ற அறிவுக் கூர்மையும் உண்டு. மற்ற உயிரினங்கள் உண்டு, உறங்கி, இனவிருத்தி செய்து காலப்போக்கில் அழிந்து போய்க்கொண்டிருக்கின்றன. இந்த உலகம் எவ்வாறு தோன்றியது? மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களால் உயிரினங்களுக்கு ஏற்படும் நன்மைகள் என்ன? இந்தக் கவலைகள் எதுவும் மற்ற உயிரினங்கட்கு இல்லை. மனித இனம் மட்டுமே இவற்றை உணர்ந்து ஆய்வு செய்தது. இந்த அற்புத இயக்கங்கட்கு மூல காரணம் ஏதோ ஒன்று இருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தது. அந்த மூலத்தைக் கடவுள் என உணர்த்தியது.*

*ஆன்றோர்களும் சான்றோர்களும் அந்த "மூலகாரணம் எங்கு உள்ளது?, அது எவ்வாறு தோன்றியது? அதனுடைய உருவ அமைப்பு எப்படி இருக்கிறது?, என்றெல்லாம் ஆய்வு செய்தனர். பலப்பல சமயங்கள் தோன்றின. மனித இனம் சமய பேதங்களால் பிளவுபட்டது. தங்கள் சமயத்தைச் சார்ந்த தெய்வம் தான் உயர்ந்தது என ஒவ்வொரு சமயமும் பேசி வருகின்றன. ஆங்காங்கே தோன்றிய அருளாளர்கள் தங்கள் தரத்திற்கேற்ப பாடல்கள் மூலமாக உருவங்களைக் கற்பித்து வர்ணித்து பக்தியைப் பரப்பினார்கள்.*

*தெய்வங்கள் பலப்பல தோன்றின. அதே போல் தெய்வ விளக்கங்களைத் தரும் வேதங்கள், ஆகமங்கள் முதலியனவும் தோன்றின. இறைவனை விளக்குவதால் வேதங்கள் பதி நூலாயின, ஆகமங்கள் பசு நூலாகவும், புராணங்கள் பாசநூலாகவும் விளங்கி வருகின்றன.*

*மக்கள் மத்தியில் பக்தி பரவிவிட்டது. கோடிக்கணக்கான பக்தர்கள் இருக்கிறார்கள். இறைவனை வணங்குகிறார்கள். தங்கள் தேவைகளை விண்ணப்பிக்கிறார்கள். இறைவன் பூர்த்தி செய்வானா? என ஏங்குகின்றார்கள். பக்தி இந்த அளவே இப்போது பரவலாக உள்ளது.*

ஒரு சிலர் அந்த ஆதிமூலத்தை ஆண்டவனைக் காண முயற்சித்தார்கள். பலர் வீடுபேறு அடைய வேண்டி இல்லற வாழ்வைத் துறந்து கானகம் சென்று கடுந்தவம் ஆற்றினர். சிலர் ஜபம் செய்தார்கள். சிலர் தியானம் செய்தார்கள். சிலர் தவம் செய்தார்கள். சிலர் யோகம் பயின்றார்கள். சிலர் பாடிக்கொண்டே இருந்தனர். அவர்கள் யார் யார் தெரியுமா? உருத்திரர், நாரணர், பிரமர், விண்ணோர், வேந்தர், கருடர், காந்தருவர், இயக்கர், பூதர், மருத்துவர், யோகியர், சித்தர், முனிவர் இன்னும் பற்பல வானவர்கள் அவர்.

மனிதரை விட இவர்கள் சிறப்புடையவர்கள் அல்லவா? அவர்கள் இறைவனைத் தேடினார்கள். எதனால் தேடினர்? தங்கள் மனதால் தேடினர். அதனால் இறைவன் கிட்டவில்லை.

எனவே இறைவனைப் பற்றியே பலப்பல விளக்கங்களை அள்ளித் தருகின்ற வேத விற்பன்னர்களை நெருங்கி நீங்களாவது இறைவனைக் கண்டதுண்டா? என்று கேட்க அந்த வேத விற்பன்னர்களும் இல்லையே. நாங்களும் கண்டதில்லை என்று வருத்தத்துடன் முற்கூறிய மற்றவர்களுடன் சேர்ந்து புலம்புகின்றனராம்.

இந்தப் பாட்டு மூலமாக வள்ளலார் என்ன கூறுகின்றார்.

மாயைக்கு அடிமையாகிய மனதைக் கொண்டு இறைவனைத் தேடினால் அவனைக் காண முடியாது. மனதிற்கு அப்பாற்பட்டவன் இறைவன்.

**உரை மனம் கடந்த ஒரு பெருவெளி மேல்**
**அரைசு செய்து ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி** (அகவல்)

மனம் செயல்படுகின்றவரை இறை அனுபவம் ஏற்படாது.

மட்டகன்ற நெடுங்காலம் மனத்தால் வாக்கால் மதித்திடினும் புலம்பிடினும் வாராது என்பதும் வள்ளலார் வாக்கே.


மனதை அடக்கிச் செயல்பாடற்ற தவத்தில் மட்டுமே இறைவனைக் காணமுடியும்.

**பொதுவுணர் உணரும் போதலால் பிரித்தே**
**அது எனில் தோன்றா அருட்பெருஞ்ஜோதி** (அகவல்)


இறைவனின் உருவம் தான் என்ன? ஒளியாய் இருந்தால் உருவமாய் இருந்தால் தோன்றுமே. அது உருவமுமல்ல – ஒளியுமல்ல – பின் எது தான் இறைவனின் உருவம். வெளி – வெளிதான் இறைவன்.

மெய்யுணர்ந்த வாதவூர் மலையைச் சுத்த வெளியாக்கிக் கலந்து கொண்ட வெளியே என்கிறார் வள்ளலார். உரைநடையில் அவர் கூறுவது என்ன தெரியுமா?

ஆகாசம் அனாதி – அதற்குக் காரணமான பரமாகாச சொருபராகிய கடவுள் அனாதி கடவுள் சொரூபம் பரமாகாசம். அதாவது வெளி தோன்றக் காரணமான வெளி. எனவே அதைக் காண முடியாது அனுபவிக்கலாம்.



## தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்



அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

**ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை**

| | |
|---|---|
| காலை உணவிற்கு | - ரூ.2,500/- |
| மதிய உணவிற்கு | - ரூ.6,500/- |
| இரவு உணவிற்கு | - ரூ.3,500/- |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு | - ரூ.4,000/- |
| பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) | - ரூ.2,500/- |
| அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) | - 15 லிட்டர் |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through:**

**HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-

**8012680865, 7502026565**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# அருள் பூரண சித்தி யோகம்

ஒரு நாள் தியான முகாம்...

தன்னையறிந்து இன்பமுறு...



- மன அழுத்தம், வேதனை, மனக்கவலை நீங்க
- நோய்களில் இருந்து விடுபட
- வாழ்க்கையில் பேரின்பம் அடைய

**ஜீவகாருண்யம், பக்தி, தியானம், சத்சங்கம்...**

இவற்றில் மூழ்கி திளைத்திட ஓர் அரிய வாய்ப்பு

**நாள்:** ஜூன் **18** ஞாயிறு [ஒருநாள் முழுவதும்]

**நேரம்:** காலை **6:30** மணி முதல் இரவு **7:00** மணி வரை

**இடம்: லயன்ஸ் காஸ்மோஸ் ஹால்,**

2/2495, காயம்பூ நகர், வேம்பக்கோட்டை ரோடு,

**சிவகாசி - 626 131**

**செல்: 74025 58046, 86753 43171, 78069 88001**



# கோசாலை

அன்பு உள்ளங்களே!



உயிர்கள் மீது நாம் தயவு காட்டும்போதுதான் இறைவன் நம்மீது தயவு காட்டுவார். அதனால்தான் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்றார் வள்ளல் பெருந்தகை. அந்த வகையில் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் பசுக்களை வைத்து பராமரித்து வருகின்றோம். தயவுள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்து பசு பராமரிப்பிற்கு உதவலாம்.

பசு பராமரிப்பிற்கு உதவ விரும்புவோர்

கீழ்கண்ட அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.


**தொடர்புக்கு: 8883590659, 7502026565**

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly May 2017, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# ஆன்மீக சத்சங்க விழா



அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

**நாள்: 28-05-2017, ஞாயிற்றுக் கிழமை**

**இடம்: அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,**
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

- அகவல் பாராயணம் - சன்மார்க்க அன்பர்கள்
- சிறப்பு சத்சங்கம் - சன்மார்க்க சாதுக்கள்
- ஜோதி தியானம்
- திருவருட்பா இசைக் கச்சேரி
- ஜோதி வழிபாடு

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

அனைவரும் அருள் பெற வருக! வருக!!

தொடர்புக்கு: 97509 29074, 99651 50531

திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865